**DEPOSITION OF WITNESS**
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 4/2018**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **P.W.2** | District | : | **புதுக்கோட்டை** |
| Name | : | **ஆரோக்கியசேவியர்** | Calling | : | **துணை வட்டாட்சியர்** |
| Father Name | : | **செபஸ்தியார்** | Age | : | **50** |
| Village | : | **அறந்தாங்கி** | | | |

Solemnly affirmed by Tmt.Abitha, Junior Assistant of this court in accordance with the provisions of Act X 1873, on the day of 06.03.2026

**As per circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2024/F1-dated.04.03.2026 the identity of the witness verified with their identity card. Aadhar card of the Witness verified.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது அறந்தாங்கியில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்றது . அதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். அறந்தாங்கி தாலுகா , கோங்குடி கிராமம் பட்டா எண்.79 ற்கான அடங்கல் பதிவேடு நகல் கேட்கப்பட்டிருந்தது . பசலி எண்.1381, 1382, 1388, 1390, 1393, 1394 ஆகியவைகளுக்கான அடங்கல் எங்களது கோப்பில் உள்ளது . அவைகளை மட்டும் தாக்கல் செய்கிறேன் . அவைகள் **சா.சா.ஆ.1** ஆகும். 1384, 1386 ஆகியவைகளுக்கான அடங்கல்கள் உள்ளது, அவை சரியாக தெரியவில்லை. பசலி எண்.1387, 1389, 1391, 1392, 1395 ஆகிய அடங்கல்கள் எங்களது அலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை. ஆகவே 1383, 1385, 1389, 1391, 1392, 1395 ஆகியவைகளுக்கான அடங்கல்கள் கிடைக்கப்பெறவில்லை . அழியாநிலை கிராமத்தை பொறுத்தவரை அழைப்பாணையில் கோரியுள்ளவாறு ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை . தற்போது

என்னிடம் காட்டப்படும் ஆவணம் எங்களது அலுவலகத்தில் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி துணை வட்டாட்சியர் பொது தகவல் அலுவலாக வழங்கப்பட்டுள்ளது. அவை **பசலி 1382, 1384, 1390, 1392, 1393 ஆகிய பசலிகளுக்கான அடங்கல்கள் ஆகும். அவை சா.சா.ஆ.2** ஆகும். **(மேற்படி ஆவணம் சம்மந்தப்பட்ட சாட்சியால் வழங்கப்படாததாலும், அது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள ஆவணமாக உள்ளதால், அதன் மனு மற்றும் அதற்குரிய பதில்களுடன் தாக்கல் செய்யாததால் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு, ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**).

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Additional District Judge,*
*Pudukkottai.*